நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி. 75/2018

2018ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 1வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: பாண்டுரங்கன் வயது: 55

த/பெ.(அ)க.பெ: ராஜ் போயன் தொழில்: கொர்த்தனார்

ஊர் : பங்கூர் சமயம்: இந்து

வட்டம் :ஆலங்காயம் சாதி:

மாவட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் பங்கூர் கிராமத்தில் குடியிருந்து வருகீறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 29.01.2018ந் தேதி நான் வழக்கம் போல் ஜமுனாமுத்தூருக்கு கொத்தனார் வேலைக்கு சென்றிருந்தேன். எதிரிகளின் வீடு மாடி வீடாகும். எங்களது வீடு அவர்கள் வீட்டிற்கு பக்கத்திலேயே உள்ளது. அவர்களது வீட்டு மாடியிலிருந்து எனது வீட்டில் பெண்கள் குளிக்கும் போது மாடியிலிருந்து எதிரிகள் 1, 2, 4 மற்றும் 1ம் எதிரியின் இளைய மகன் கார்த்திக் பார்ப்பது வழக்கமாக இருந்தது. அதை நான் பலமுறை கண்டித்துள்ளேன். அன்றயை தினம் இரவு 8.00 மணிக்கு வேலைக்கு சென்று வரும்போது எனது மனைவி அவ்வாறு நடந்ததை என்னிடம் சொன்னார். அதை எதிரிகளிடம் கேட்ட போது 2ம் எதிரி என்னிடம் நான் மட்டும் பார்த்தால் போததாது எல்லோரும் பார்க்கட்டும் என வாட்ஸ்அப்பில் போட்டுவிடுவேன் என சொன்னார். அப்போது 2ம் எதிரி இரவில் சாட்சியே இல்லாமல் உன்னை அிடிக்கிறேன் என சொல்லிவிட்டு சென்றார். நானும் அங்கிருந்து சென்று விட்டேன். அன்று இரவு 11.00 மணிக்கு 1ம் எதிரி அங்கு வந்து கதவை தட்டினார். நான் கதவை திறந்த உடன் 2ம் எதிரி மறைத்து வைத்திருந்த கத்தியால் என்னை தலையில் வெட்டி விட்டார். நான் கீழே விழுந்தவுடன் எதிரிகள் நால்வரும் மற்றும் அவரது இளைய மகன் கார்த்திக் ஆகியோருமாக சேர்ந்து எனது மனைவியை மானபங்க படுத்த தூக்கினார்கள். அதை தடுக்க சென்ற போது எனது வலது கால் மீது கல்லை தூக்கி போட்டுவிட்டனர். இடது கையில் கடப்பாரையால் அடித்து விட்டார்கள். எனது மனைவிக்கு கத்தியால் இடது தலை காது ஓரமாக வெட்டிவிட்டனர். எனது மனைவி சுயநினைவின்றி இருந்தார். எனது மகன் லட்சுமி காந்தன் எங்களுக்கு தண்ணீர் தொளித்து விட்டு எனது அண்ணி தனலட்சுமி என்பவரை அழைத்து வந்தார். அப்போது அங்கு வேறு யாரும் வரவில்லை. ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி எனது அண்ணி வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சென்றார். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நாங்கள் அடுக்கம்பாறை

மருத்துவமனையில் சிசிச்சையில் இருந்த போது போலீஸார் வந்து விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் அ.த.சா.ஆ 1 ஆகும். என்னிடம் காட்டப்படும் கத்தி, உடைந்த நிலையில் உள்ள கொம்பு எதிரிகள் அடிக்க பயன்படுத்தியது இல்லை. கத்தி பெரியதாக இருந்தது. கடப்பாரையால் தாக்கினார்கள். தற்போதும் எதிரிகள் எங்கள் வீட்டின் மீது குப்பை போடுகிறார்கள். எங்கள் உயிருக்கு பாதுகாப்பு இல்லை. இது சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தனர்.

எ.த.கு.வி:- இல்லை.

நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி. 75/2018

2018ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 2வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: கெங்காம்மாள் வயது: 35

த/பெ.(அ)க.பெ:பாண்டுரங்கன் தொழில்: கூலி

ஊர் : பங்கூர் சமயம்: இந்து

வட்டம் :ஆலங்காயம் சாதி:

மாவட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் பங்கூர் கிராமத்தில் குடியிருந்து வருகீறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 எனது கணவர். 29.01.2018ந் தேதி அன்று நான் குளிக்கும் போது 2, 3 ம் எதிரிகள் பார்த்ததால் அதை எனது கணவரிடம் சொன்னேன். அதை கணவர் இரவு 8.00 மணிக்கு எதிரிகளிடம் சென்று கேட்டபோது அப்படிதான் செய்வோம் என்ன பிடுங்க முடியுமோ பிடிங்கி கொள் என சொன்னார்கள். அன்று இரவு எதிரிகள் அனைவரும் எங்கள் வீட்டு கதவை தட்டினார்கள். கதவை திறந்த போது 3ம் எதிரி லதா என்னை பிடித்து இழுத்து அப்படி தான் எனது பசங்க செய்வாங்க அப்படி தான் செய்வோம் என சொன்னார். அப்போது எதிரிகள் நால்வரும் மற்றும் 1ம் எதிரியின் இளைய மகன் கார்த்திக் ஆகியோருமாக சேர்ந்து என்னையும் எனது கணவரையும் கத்தியை மறைத்து எடுத்து வந்து அடித்தார்கள். எனது கணவரை வெட்ட முயன்ற போது நான் தடுத்தேன். அதில் எனது தலையின் வலது பக்கத்தில் வலது காது முன்பாகவும், இடது கையிலும் காயம ஏற்பட்டது. அதன் பிறகு எனது கணவரை 2, 4 எதிரிகள் பிடித்து கொள்ள கல்லை தூக்கி காலில் போட்டனர். நாங்கள் மூச்சு பேச்சு இல்லாமல் விழுந்து விட்டோம். எனது 11 வயது மகன் தண்ணீர் குடிக்க வைத்துவிட்டு ஆம்புலன்ஸிக்கு போன் செய்து எனது மூத்தாரை அழைத்து வந்தார். எதிரிகளிடம் எனது மூத்தார் கேட்ட போது அவ்வாறு தான் செய்வோம் என சொல்லிவிட்டு சென்றுள்ளனர். காயம்பட்ட எங்களை வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்து பின்னர் மேல் சிகிச்சைக்காக அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். என்னிடம் காட்டப்படும் கத்தி,

உடைந்த நிலையில் உள்ள கொம்பு எதிரிகள் அடிக்க பயன்படுத்தியது இல்லை.அவை வேறு. இது சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

எ.த.கு.வி:- இல்லை.

நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி. 75/2018

2018ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 3வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: தனலட்சுமி வயது: 60

த/பெ.(அ)க.பெ:வெங்கடேசன் தொழில்: கூலி

ஊர் : பங்கூர் சமயம்: இந்து

வட்டம் :ஆலங்காயம் சாதி:

மாவட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் பங்கூர் கிராமத்தில் குடியிருந்து வருகீறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும்.அ.சா.1, 2 ஐ தெரியும். அ.சா.1 எனது மைத்துனர். வரும் ஜனவரி மாதம் வந்தால் ஒரு வருடம் ஆகும். எனக்கு தேதி நினைவில்லை. அன்று இரவு 11.00 மணிக்கு மேலாக அ.சா.1ன் மகன் லட்சுமிகாந்தன் எனது வீட்டிற்கு வந்து அவனது அம்மா, அப்பாவை பக்கத்துவீட்டுக்காரர்கள் அடித்து கண் முழிக்காமல் இருப்பதாக தகவல் சொன்னார். தகவல் சொன்னபிறகு நான் வீட்டிற்கு சென்று பார்த்த போது அ.சா.1 க்கு தலையிலும், கையிலும், காலிலும் காயங்களும், அ.சா.2க்கும் வலது நெற்றியின் மேல் தலை பக்கத்திலும், இடது கையிலும் காயம் இருந்தது. எதிரிகளிடம் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என கேட்டதற்கு 3ம் எதிரி நீ யார் கேட்பதற்கு என்ன சாதிக்க முடியுமோ சாதித்து கொள் என சொன்னார். அதன் பிறகு வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அழைத்து சென்றோம். அ.சா.2டம் கேட்ட போது அவர் குளித்ததை 2ம் எதிரி பார்த்ததை கணவரிடம் சொன்னதாகவம், அவர் கேட்டதற்கு இவ்வாறு செய்ததாக தகவல் சொன்னார். போலீஸார் என்னை விசாரித்தனர்.

எ.த.கு.வி:- இல்லை.